
வடலிகள் வானுயரும்

# வடலிகள்

பெப்ரவரி - 2018

இதழ் - 3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற தோற்றங்களை உடைய விசித்திரமான பூக்கள் இவை








## கண்டுபிடியுங்கள்..!


1. இங்கு மொத்தம் எத்தனை பறவைகள் உள்ளன?

2. கழுகு மொத்தம் மூன்று முட்டைகளிட்டது. இன்னொரு முட்டை எங்கே?

3. கழுகு ஓர் ஆபத்தில் சிக்கியுள்ளது. அது என்ன?

4. இந்த பாம்பு இப்போதுதான் ஓர் உயிரை வேட்டையாடி விழுங்கியது. அது என்ன?

5. நிலத்தில் இரண்டு பாம்புகள் உள்ளன இன்னொரு பாம்பு எங்கே?

விடைகள் பின் அட்டையின் உள் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடலிகள்

நிர்வாக ஆசிரியர்
சுந்தரம் டிவகலாலா

ஆசிரியர் குழு
விவேக்
ந.அனந்தராஜ்

ஆலோசகர் குழு
செல்வி.ஜெயா தம்பையா
செ.மகேசு
கலாநிதி செல்வி எஸ்.நல்லையா

சஞ்சிகை வடிவமைப்பு
அல்பேட் பெஸ்ரியன்

வெளியீடு
ஆறுதல் நிறுவனம்

முகவரி
இல.51, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி
021 221 7092

தொலைநகல்
021 221 7092


மின்னஞ்சல்
aaruthaltrinco@gmail.com

இணையதளம்
www.aaruthal.lk

விலை : 50 ரூபாய்



## மகிழ்வான வாசிப்பும், கற்றலும்!



'வடலிகள்' சஞ்சிகையின் மூன்றாவது இதழ் இது. இது போன்றதொரு சஞ்சிகையின் அவசியம் குறுகிய காலத்திலேயே பலராலும் உணரப்பட்டுள்ளமையினை அறிகின்றோம்.

சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் போன்றவற்றை 'வடலிகள்' சஞ்சிகையிலிருந்து தாங்கள் பிள்ளைகளுக்கு சொல்லித் கொடுக்கக்கூடியதாக இருப்பதாகவும், எனவே, இச் சஞ்சிகை தங்களுக்கு பயன்மிக்கதாக இருப்பதாகவும் முன் பள்ளி ஆசியர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவர் என்று குறிப்பிடப் படுகின்றனர். முன்பள்ளிச் சிறார்கள் தொடக்கம் ஆறாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் வரை வாசித்து, மகிழ்ந்து, பயன்பெறக் கூடிய வகையில், 'வடலிகள்' சஞ்சிகையின் உள்ளடக்கம் தெரிவு செய்யப்படுகின்றது.

மகிழ்ச்சியான வாசிப்புடன், அறநெறிகளையும் அறிந்து கொள்ளும் வகையில், கதைகள், பாடல்கள் போன்றனவும், மூளைக்கு வேலை கொடுக்கும் புதிர்கள் உள்ளிட்ட விடயங்களும் எளிமையான நடையில் வடலிகளில் தருகின்றோம்.

முன்பள்ளிகளில் ஆசிரியர்களாலும், வீடுகளில் பெற்றோராலும் இதில் வரும் விடயங்களை சிறுபிள்ளைகளுக்கு விளக்கி சொல்லிக் கொடுக்கலாம். வளர்ந்த சிறுவர்கள் தாங்களாகவே வாசித்து அறிந்து கொள்ளலாம். இதனடிப்படையிலேயே 'வடலிகள்' சஞ்சிகை வடிவமைக்கப்படுகின்றது.

'வடலிகள்' முழுக்க முழுக்க மகிழ்ச்சியான கற்றலை வழங்கவும், ஊக்குவிக்கவும் உதவும் என்றே நம்புகின்றோம். இது தொடர்பில் ஆசிரியர், பெற்றோரின் கருத்துக்களை வரவேற்கின்றோம்.

**– ஆசிரியர் குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கமும் நரியும் வகுத்த திட்டம்

ஒரு காட்டில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒரு சிங்கமும், நரியும் வெகு நாளாக உணவின்றி அலைந்து திரிந்து கொண்டிருந்தன. ஒரு நாள் இரண்டும் நேருக்கு நேர் சந்தித்து தங்களது நிலைமை பற்றி புலம்பிக் கொண்டன.

இறுதியாக இரண்டும் சேர்ந்து வேட்டையாடுவது என்ற முடிவுக்கு வந்தன. அதற்கு சிங்கம் ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தது. அதாவது, நரி பலமாக சத்தம் போட்டுக் கத்த வேண்டும். அந்த சத்தத்தைக் கேட்டதும் காட்டு விலங்குகள் மிரண்டு அங்கும் இங்கும் ஓடும். அப்படி ஓடும் மிருகங்களை சிங்கம் அடித்துக் கொல்ல வேண்டும்.

இந்த யோசனை நரிக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் உடனே ஒப்புக் கொண்டது. அதன்படி, நரி தனது பயங்கரமான குரலில் கத்தத் துவங்கியது. அதன் விசித்திரமான சத்தத்தைக் கேட்ட காட்டு விலங்குகள் அங்கும் இங்கும் வேகமாக ஓடின. அந்த சமயத்தில், சிங்கம் நின்றிருந்த பக்கம் வந்த விலங்குகளை எல்லாம் வேட்டையாடிக் கொன்றது.

ஒரு கட்டத்தில் நரி கத்துவதை நிறுத்திவிட்டு சிங்கத்தின் பக்கம் வந்தது. அங்கு வந்ததும் நரிக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஏனெனில் நிறைய மிருகங்கள் அங்கு இறந்து கிடந்தன. அதைப் பார்த்ததும் நரி, தான் அகோரமாகக் கத்தியதால்தான் இந்த மிருகங்கள் இறந்து விட்டன என்று கர்வம் கொண்டது.

"சிங்கத்தின் அருகில் வந்து, என்னுடைய வேலையைப் பற்றி என்ன நினைக்கிறாய்? நான் கத்தியே இத்தனை மிருகங்களை கொன்றுவிட்டேன் பார்த்தாயா?" என்று கர்வத்துடன் கேட்டது.

அதற்கு சிங்கம், "ஆமாம். உன் வேலையைப் பற்றி சொல்ல வேண்டுமா என்ன? நீதான் கத்துகிறாய் என்று தெரியாமல் இருந்திருந்தால் ஒரு வேளை நானும் பயத்திலேயே செத்துப் போயிருப்பேன்" என்று பாராட்டியது ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலந்தி போதித்த பாடம்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடிய வில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் அவன் வெற்றி பெற்றான்.

தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று, அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது அது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் "இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் கைவிட வேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான் மறுபடியும் தன் எதிரி யுடன் போர் புரியத் தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தனக்கு நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் இழந்த தனது அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிறிய சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துட்டனுக்கு அறிவுரை கூறுவது ஆபத்தானது

காட்டில் ஒரு நாள் அடை மழை பெய்துக் கொண்டிருந்தது. அப்போது அந்தக் காட்டில் இருந்த ஒரு குரங்கு மழையில் நனைந்து நடுங்கியவாறு ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றது.

அந்த மரத்தில் இருந்த பறவை ஒன்று கூடு கட்டி தன் குஞ்சுகளுடன் மழைக்கு நனையாது பாதுகாப்பாக இருந்தது.

மரத்தடியில் குரங்கு நனைந்து நடுங்குவதைப் பார்த்ததும் பறவைக்கு குரங்கு மீது இரக்கம் வந்தது. மனம் பொறுக்காமல் "குரங்காரே... என்னைப் பாரும்... வெய்யில் மழையிலிருந்து என்னையும் என் குஞ்சுகளையும் காப்பாற்றிக் கொள்ள கூடு கட்டி-இருக்கிறேன். அதனால் தான் இந்த மழையிலும் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். நீரும் அப்படி ஒரு பாதுகாப்பான கூடு செய்திருக்கலாமே. கூடு இருந்தால் நீர் இப்படி நனைய மாட்டீர் அல்லவா?" என்று புத்தி சொன்னது.

இதனைக் கேட்ட குரங்கிற்கு கோபம் சீறிக் கொண்டு வந்தது. "உன்னைவிட நான் எவ்வளவு வலுவானவன். எனக்கு நீ புத்தி சொல்கிறாயா..? இப்போது உன்னையும் உன் குஞ்சுகளையும் என்ன செய்கிறேன் பார்" என மரத்தில் ஏறி பறவையின் கூட்டைப் பிய்த்து எறிந்தது.

பறவைக்கு அப்போதுதான் புரிந்தது அறிவுரைகளைக்கூட அதைக் கேட்டு நடப்பவர்களுக்குத்தான் சொல்லவேண்டும் என்று. துட்டனுக்கு நல்லது சொல்லப் போய் தனக்கும் தன் குஞ்சுகளுக்கும் பாதுகாப்பாக இருந்த கூட்டை இழந்து நனைகின்றோமே என பறவை மனம் வருந்தியது.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம் போகலாமே






பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா – நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா – கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா – உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!






வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் – அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா – ஏற்ற
இடம் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!







பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா – நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணம் தீட்டுங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டு நாயின் தந்திரம்

ஒரு காட்டில் காட்டுநாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப்புலி தன்னை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்ததை அந்த காட்டுநாய் பார்த்தது.

நாயை பிடித்து தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப்புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பி செல்வது என்பது காட்டு நாயின் கவலை.

ஓடிச்செல்வதால் பயனில்லை. ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப்புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது.

எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்க தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றை பார்த்தும் உடனே அந்த காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப்புலியின் பக்கம் தன் முதுகை திருப்பிக்கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பதுபோல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப்புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்கு தயாரான போது காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

“இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப்புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப்புலி கிடைக்குமா? என்று தேடிப்பார்க்க வேண்டும்” என்றது.

இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப்புலி அப்படியே சிலைபோல் நின்று விட்டது.

இந்த காட்டு நாய் சிறுத்தைப்புலிகளையே கொன்று தின்று விடுகிறதே. அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். இதனிடம் அகப்படாமல் தப்பசி சென்றுவிட வேண்டும் என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கி சென்று அந்த சிறுத்தைப்புலி புதருக்குள் மறைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருகில், ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந் தது. தனக்கு தெரிந்த தகவலை சிறுத்தைப்புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப்புலியுடன் பேரம் பேசி தனக்கு பாதுகாப்பு தேடிக் கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது.

எனவே, சிறுத்தைப்புலியை பின்தொடர்ந்து அந்தக் குரங்கு வேகமாக ஓடிச் சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என்பதை புரிந்துக்கொண்டது.

குரங்கு, சிறுத்தைப்புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப்புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் சொன்னது. சிறுத்தைப்புலிக்கு தாங்க முடியாத கோபமும், ஆத்திரமும் வந்தது.


“அந்த காட்டுநாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தை புகட்டுகிறேன். இந்த காட்டில் யார் யாரை கொன்று தின்பார்கள் என்பதை காட்டுகிறேன்” என்று சொல்லிவிட்டு, “குரங்கே வா. என் முதுகில் ஏறி உட்கார். இருவரும் அந்த காட்டு நாயை பிடிக்கலாம்” என்றது. குரங்கு, சிறுத்தைப்புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது.

இரண்டும் நாயை நோக்கி சென்றன. சிறுத்தையும், குரங்கும் சேர்ந்து வருவதை காட்டுநாய் பார்த்தது. இந்த திருட்டுக் குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டதே இப்போது என்ன செய்வது? என்று அந்த காட்டுநாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்த காட்டுநாய் பயந்து ஓடவில்லை.

அந்த சிறுத்தையையும், குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்கு தன் முதுகை காட்டிக்கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்த காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

“அந்த போக்கிரிக் குரங்கு எங்கே போய் தொலைந்தது. அதனை நம்பவே முடியாது. நான் இன்னொரு சிறுத்தைப்புலியை சாப்பிடுவதற்கு பிடித்துக் கொண்டுவா என்று சொல்லி அனுப்பி அரை மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்த குரங்கை காணோமே?” என்றது.


காட்டு நாய் சொன்னதை கேட்ட சிறுத்தைப்புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது. அதனை கடித்துக் குதறி கொன்று தின்றுவிட்டது ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராணிகளை வதைக்காதே!






நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில்லா பிராணியை வதைக்காதே



கோழிக் குஞ்சைத் திருகாதே
குருவிக் கூண்டை உருவாதே
ஆழி சூழுலம் உலகேத்தும்
அன்பு காட்டி வதிவாயே.




ஊனைத் தின்று வாழாதே
உயிரைக் கொன்று தாழாதே
மானைக் கொன்றால் மான் கன்று
வருந்தல் நீயும் அறிவாயோ?



கிளியைக் கூண்டில் அடைக்காதே
கேடுனை வந்து சூழ்ந்திடுமே
ஒளியே யில்லாச் சிறைதனிலே
உன்னை வைத்தாற் சகிப்பாயோ?





எல்லா உயிரும் இறைமகவே
இன்பம் நாடி உழைப்பனவே
பொல்லாப் பொன்றும் செய்யாதே
புனித வாழ்வு காண்பாயே.

- திரு வே.சிவக்கொழுந்து (கவிஞர், யாழ்ப்பாணன்) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொம்மை பார்

பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்

தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்

கையை வீசும் பொம்மை பார்
கண்ணை சிமிட்டும் பொம்மை பார்

எனக்குக் கிடைத்த பொம்மை போல்
எதுவும் இல்லை உலகினிலே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முல்லா கதை

# தலைப்பாகைக்கு பதிலாக சால்வை

ஒரு நாள் முல்லா ஒரு துணிக்கடைக்குச் சென்றார். அங்கு தலைப்பாகைகளும் விற்கப்பட்டன. தமக்கு ஒரு தலைப்பாகை வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் முல்லா அங்கு சென்றார். அழகான ஒரு தலைப்பாகையைத் தேர்ந்தெடுத்து விலை பேசினார். பிறகு தலைப்பாகையைத் தலையில் அணிந்து கொண்டார்.

அந்தக் கடையில் அழகான சால்வைகளும் விற்கப்படுவதை முல்லா கண்டார். தலைப்பாகைக்கு பதிலாக சால்வையை வாங்கி விடலாம் என்று அவருக்குத் தோன்றியது. அதனால் அவர் கடைக்காரனைப் பார்த்து "இந்தப் தலைப்பாகைக்குப் பதிலாக சால்வையை வாங்கிக் கொள்கிறேன். இரண்டின் விலையும் ஒன்றாகத்தானே இருக்கிறது" என்றார்.

"உங்கள் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார் கடைக்காரர். முல்லா தலைப்பாகையை கழற்றிக் கொடுத்து விட்டு சால்வையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். "ஐயா, நீங்கள் வாங்கிய சால்வைக்குப் பணம் கொடுக்கவில்லையே என்று கடைக்காரர் கேட்டார். நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும். தலைப்பாகைக்குப் பதிலாகத்தானே சால்வையை வாங்கிக் கொண்டேன்" என்றார் முல்லா.


"அப்படியானால் தலைப்பாகைக்கு பணம் கொடுங்கள்" என்றார் கடைக்காரர். "தலைப்பாகைக்கு ஏன் பணம் தரவேண்டும் அதைத்தான் உங்களிடம் திருப்பி கொடுத்துவிட்டேனே?" என்று கூறிவாறு கடையை விட்டுக் கம்பீரமாக வெளியே நடந்தார் முல்லா.

கடைக்காரருக்கு ஒன்றுமே விளங்க வில்லை. அவருடைய மூளை குழம்பி விட்டது ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசகுமாரியின் முத்துமாலை

ஒரு பெரிய மரம். அதில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு காக்கைகள் கூடு கட்டிக்கொண்டு மகிழ்ச்சியாக இருந்தன. ஒரு நாள் அம்மரத்தில் இருந்த பொந்திற்கு ஒரு கருநாகம் வந்து சேர்ந்தது. சேர்ந்ததோடு இல்லாமல் காக்கை இடும் முட்டைகளை எல்லாம் ஒவ்வொரு நாளும் உடைத்துக் குடித்து வந்தது.

காக்கைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கருநாகத்தை காக்கை என்ன செய்ய முடியும்? ஒரு நரியிடம் ஆலோசனை கேட்டது.



நரி சரியான யோசனை ஒன்றை சொன்னது.

"அந்தப்புரத்தில் அரசகுமாரி குளிக்கிற இடத்திற்குப் போ. அவள் குளிக்கும்போது நகைகளை கழட்டி ஒரு பக்கம் வைப்பாள். அந்த ஆபரணங்களில் பெரியதான ஒன்றை எடுத்துக்கொள். பலர் பார்க்கும் படி மெல்லப் பறந்து வந்து அவர்களின் எதிரில் அந்த நகைப்பாம்பு இருக்கும் பொந்தில் போட்டு விடு. யாராவது பார்க்கும் படி போட வேண்டும்" என்றது.



"அப்படிப் போட்டால் என்ன நடக்கும்?" என்று கேட்டது காகம்.

"முதலில் போடு பிறகு பார்" என்றது நரி.

காக்கை தாமதிக்கவில்லை. பறந்து அந்தப்புரத்திற்கு சென்று பார்த்தது அரசகுமாரியின் நகைகளை. ஒரு முத்துமாலை அதன் கண்ணை உறுத்தியது. அதையே கொத்தி எடுத்தது. அங்கிருந்த அரசகுமாரியின் தோழிகள் "ஆ, காகம் முத்துமாலையைக் கொத்திக் கொண்டுப் போகிறது" என்று கத்தினர்.

உடனே சேவகர்கள் ஓடி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காக்கை மெதுவாக □ அவர்களின் கண்ணில் படும்படி பறந்து வந்தது. அவர்கள் அருகில் வந்து பார்க்கும்படி அந்த முத்துமாலையை பாம்பு இருக்கும் பொந்தில் போட்டது.

உடனே சேவகர்கள் தம் கையில் இருந்த ஈட்டிகளால் அந்தப் பொந்தைக் குத்திக் கிளறினார்கள். உள்ளே இருந்த பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தபோது அதைக் கொன்றார்கள்.

நரியார் சொன்னதின் அர்த்தம் காக்கைக்குப் அப்போது புரிந்தது. சேவகர்களும் முத்து மாலையை எடுத்துச் சென்றனர். சரியான யோசனையால் நிறைவான பலனை அடைந்த காக்கைத் தம்பதிகள் நிம்மதிப் பெருமூச்சி விட்டன ●


**வீடு செல்ல வழி காட்டுங்கள்!**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் குதிரை




கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப் படையும் வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரி களில் ஒருவர் ஒரு யோசனை சொன்னர். அதன்படி நடந்தது.




அதாவது ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டு வந்தது. அத்தொகை யைப் பெற்றுக் கொண்டு குதிரையை நன்கு ஊட்டம் அளித்து வளர்த்தனர். அதே போல் தென்னாலி ராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. ஆனால், தென்னாலி ராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய தூவாரம் வைத்திருந்தான்.

**தென்னாலிராமன் கதை**



அந்த துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது. குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தென்னாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான்.

ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அரண்மனைக்கு வரவழைத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன.




மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தென்னாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை" என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராமனோ "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தான் இங்கே கொண்டு வரவில்லை. குதிரைப் படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தென்னாலிராமனுடன் அனுப்பினார்.


குதிரைப்படைத் தலைவருக்கு நீண்ட தாடியுண்டு. குதிரைப் படைத் தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத் தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும் என்று எண்ணி தென்னாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.




அங்கு குதிரையின் வாயில் குதிரைப்படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும் தோலுமாக, நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தென்னாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தென்னாலிராமன் "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத் தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி என்னவாகியிருக்கும்?" என்றான்.




இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தென்னாலிராமனை மன்னித்து விட்டார் ■







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணக் கிளியே...






பச்சை ஆடை அணிந்து வந்த
வண்ணப் பறவை கிளியாம்.

சிவப்பு மாலை கழுத்தில் அணிந்து
சிறகடித்த கிளியாம்.

பாலும் பழமும் உண்டு மகிழ
பறந்து வந்த கிளியாம்.

கூட்டினுள் இருக்க வருத்தப்பட்ட
குறும்புக் கார கிளியாம்.





நான் பாடும் பாட்டுகளை
திரும்பிப் பாடும் கிளியாம்

நான் பேசும் பேச்சுக்களை
திருப்பிப் பேசும் கிளியாம்

நண்பர்களோடு சேர்ந்து வாழ
தாவிப் பறக்கும் கிளியாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு படங்களிலும் 10 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்!






## சீனப் புதிர் விளையாட்டு



இந்த சீன புதிர் விளையாட்டு 5000 வருடங்களுக்கு முந்தியதாகும். இதனை விளையாடுவதற்கான தகைமை ஆர்வம் மட்டுமே, சிறுவர்களின் கற்பனை வளத்தை பெருக்கவல்லது இவ் விளையாட்டு.

ஒரு சதுரமான அட்டையை இங்கு காட்டியது போல் 7 துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பிளாஸ்ரிக், இரப்பர், மரத்துண்டு என் பனவற்றிலும் வெட்டிக் கொள்ளலாம்.



இந்த 7 துண்டுகளையும் பயன்படுத்தி உருவங்களை உருவாக்க வேண்டும். எந்த ஒரு துண்டையும் மிகுதியாக வைக்கக்கூடாது என்பது முக்கியம். அத்துடன் ஒரு துண்டின் மேல் இன்னொரு துண்டை வைக்கக் கூடாது. அருகில்தான் வைக்க வேண்டும்.

பறவைகள், மிருகங்கள், கருவிகள், மனித உருவங்கள் என இதன் மூலம் 1600 இற்கும் அதிகமான உருவங்களை உருவாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய ஒளி முன்பள்ளி

நாவாந்துறைப் பிரதேசத்தில் பொம்மை வெளியை அண்மித்ததாக 'நித்திய ஒளி' முன்பள்ளி அமைந்துள்ளது. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் இப்பள்ளியில் சேர்ந்து தமது ஆளுமைகளை வெளிப்படுத்தித் திறன்கொண்டு வெளியேறிய 162 சிறுவர்கள் அரசாங்க பாடசாலைகளில் தமது கல்வியை வளர்ச்சித் தரங்களில் பெற்று முன்னேறி வருகின்றனர்.



வளமற்றதும், வெள்ளம் தேங்கும் பள்ளங்கள் நிறைந்ததும், சீரற்றதுமான தரைத் தோற்றமும், அடிப்படை வசதிகள் எதுவுமற்றதுமான பிரதேசத்தின் மறுமலர்ச்சிக்காக அங்கு குடியேறிய சிறு தொகையினராகிய குடும்பத்தினர் பல வகைகளில் உழைத்தனர். சாதிமத வேறுபாடின்றி தமது வாழிடத்தை வளப்படுத்த முயன்றதோடு தமது வாழ்க்கையையும் சிறப்பாக உயர்த்த உழைத்தனர்.

அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையரான அம்பலவாணர் தர்மராஜா அவர்கள் கிராமத்தின் பின்தங்கிய நிலையை அறிந்து கிராமம் வளங்களால் மேம்பட உதவ முன்வந்தார். அவுஸ்திரேலியாவில் நித்தியஒளி அற அமைப்பு நிதியத்தின் ஊடான சமூக சேவை அமைப்பின் பங்காளராகிய அவர், இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்தார். அவர் இலங்கைக்கு வந்து தங்கிச் செல்லும் நாள்களில் கிராமத்தின் மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து செயற்படுவதில் ஆர்வமாகவிருந்தார்.

அவ்வாறு ஒருமுறை கிராம மக்களைச் சந்தித்த போது அவர்கள் தமக்கிருந்த தேவைகளில் வீடு, கிணறு, மலசல கூடம் என்பவற்றிலும் மேலானதாக, பாலர்களுக்கான முன்பள்ளி ஒன்றின் தேவையையே முன்வைத்தனர். அந்த வகையில் உருவானதே 'நித்திய ஒளி' முன்பள்ளியாகும். நித்திய ஒளி என்ற பெயர் கொண்டு மலர்ந்த முன்பள்ளியின் பெயரையே அக்கிராமம் தற்பொழுது தனது பெயராகச் சூடிக் கொண்டதோடு அக் கிராமத்தில் வளரும் பாலர்களை முன்பள்ளிக் கல்வியால் முன்னேற்ற உழைத்து வருகின்றது.

2005ஆம் ஆண்டு ஆவணி மாதம் 05ஆம் திகதி, 'நித்திய ஒளி' முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது ஆசிரியைகளான செல்விகள் ச.ஜெயதாரணி, அ.லக்சிகா, கு.கௌதமி, திருமதி இ.தவேந்திரா தேவி ஆகியோர் பள்ளியின் பாலர்களை மகிழ்ச்சிகரமாக வழிநடத்துகிறார்கள்.

அவுஸ்திரேலியாவில் வதியும் திரு. அம்பலவாணர் தர்மராஜா அவர்களின் முயற்சியினால் நித்திய ஒளி அறக்கொடை அமைப்பின் வழியாக முன்பள்ளியின் ஆசிரியைகளுக்கான சம்பளம் வழங்கப்படுகின்றது. பள்ளியின் புதிய கட்டிடம் பாதுகாப்பான வேலி என்பன அமைக்கப்பட்டதுடன் பள்ளிப் பிள்ளைகளின் சீருடை, குடிநீர் வசதி, மின்சாரம் என்பனவும் நித்தியஒளி அறக்கொடை அமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலம் பெறப்பட்டமை பாராட் டுக்குரியதாகும்.

இவைதவிர அரச, அரசசார் பற்ற நிறுவனங்களின் உதவி கள் மூலம் கட்டிடத் திருத்த வேலைகள், சிறுவர்களுக் கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் என்பனவும் மலசல கூட வசதிகள், மைதான சீர மைப்பு, சிறுவர் பூங்கா என் பனவும் பெறப்பட்டன.

எமது பாலர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குற முன்னெடுக்கும் வகையில் ஆறுதல் நிறுவனத்தின் அனு சரணையுடன் கல்வி அமைச் சினால் தயாரிக்கப்பட்ட விளை யாடுவோம் கற்போம் என்ற கைநூலின் பயன்பாடு 'நித்திய ஒளி' முன்பள்ளிச் சிறுவர்களின் மகிழ்ச்சி கரமான கற்றலுக்குப் பெரிதும் உதவுகின்றது.

பாலர்களின் திறன்விருத் தியை மேம்படுத்தப் பேச் சுத்திறன், விளையாட்டு, ஆக்கத்திறன் மேம்பாடு என்பவற்றினை வெளிப் படுத்தும் நிகழ்ச்சிகளின் அரங்கேற்றம், கண்காட்சி என்பனவும் வருடா வருடம் சிறப்புற இடம்பெறுகின்றன. பெற்றோருடன் பிள்ளைகள் சுற்றுலா, பொங்கல் விழா, கால்கோள் விழா என்பவற்று டன் தவணைதோறும் சிறுவர் களின் திறனறியும் கணிப்பீடு களும் நடைபெறுகின்றன.


பிள்ளைகள் ஒழுக்க சீலர் களாக வளர வாழ, அன்பு, கருணை காருண்யம் ஆகிய சிறப்புக்கள் துலங்க வழிகாட் டும் ஆசிரியைகளின் நல்மனப் பாங்கோடு பள்ளிச் சிறுவர்க ளின் முன்பள்ளிக்காலம் இன் புற, பெற்றோர் சமூகம் யாவும் எம்முடன் ஒத்துழைப்பதை அவதானிக்கின்றோம்.

சிறுவர் ஒருவருக்கான அனு மதிக் கட்டணமாக ரூபாய் நூறும் (100/=) மாதக் கட்ட ணமாக ரூபாய் நூறும் (100/=) பெறப்படுகிறது. இவைதவிர சிறுவர்களின் கலை கலாசார விழாக்கள் தொடர்பிலான நிதிக்கெனப் பெற்றோரின் விருப்புக்கேற்ப பண ஒத்து ழைப்பு வழங்கப்படுகின்றது.

பள்ளி மட்டத்திலும், கோட்ட, வலய மட்டங்களிலும் சிறுவர் கள் பங்கு கொள்ளும் நிகழ்ச் சிகளுக்கான முன்னாயத்தங் கள் ஊக்கத்தோடு முன்னெ டுக்கப்படுகின்றன. நித்தி ஒளி கிராமத்தின் பாலர் கல்விக் கென ஆரம்பிக்கப்பட்ட 'நித் திய ஒளி' முன்பள்ளியில் தற் பொழுது அயலிலுள்ள கிரா மங்களிலிருந்தும் பாலர்கள் வந்து இணைந்து கொண்டு மகிழ்ந்து கற்கின்றனர்.

முழுமையாகவே 'நித்திய ஒளி' முன்பள்ளியின் வளர்ச்சி யில் கிராமம் ஈடுபட்டுழைப்பது பாராட்டுக்குரியதாகும் ●

**சத்தியசீலன் ஜெகதாரணி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# பறவை

குருவி ஒரு பறவை
கோழி ஒரு பறவை
அருவிக் கரை யோரம்
அலையும் கொக்கும் பறவை


கழுகும் ஒரு பறவை
காகம் ஒரு பறவை
அழகுத் தோகை விரித்தே
ஆடும் மயில் பறவை

சேவல் ஒரு பறவை
சிட்டும் ஒரு பறவை
கூவி இசை பாடும்
குயிலும் ஒரு பறவை.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடி வாழும் குருவி

சின்னச் சின்ன சிட்டுக் குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி!

கொட்டிக் கிடக்கும் தானியக் குவியலை
கூடி வந்து கூடி நின்று
தொட்டு தொட்டு கொத்தித் தின்று
கூடிப் பறந்து கூடு செல்லும்!

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக் குருவி
நன்றாய் செப்பும் பாடம் செவியுறுவீர்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜென் கதை

# தங்கம் விளாம்பழமானது!

தாமும் தன்னாலான தான தருமத்தைச் செய்ய வேண்00டும் என்று ஒருவனுக்கு ஆசை வந்தது. அடுத்த நாளிலிருந்து தினமும் கடுகளவு தங்கம் தானம் செய்ய ஆரம்பித்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் மனைவி "தினமும் கடுகளவு தங்கம் தானம் செய்வதால் யாருக்கு என்ன இலாபம்? தினம் கடுகளவு தங்கம் எடுத்து ஒரு டப்பாவில் போட்டு வையுங்கள் மொத்தமாகச் சேர்ந்ததும் அதை உருக்கி யாருக் காவது கொடுக்கலாம்" என்றாள்.


மனைவி பேச்சைக் கேட்டு அவனும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தான். கடுகு அளவிலிருந்த தங்கம், போகப்போக விளாம்பழ அளவுக்கு அதிகமாகிக் கொண்டே போனது. அவ்வப்போது உருக்கி உருண்டையாக்கிக் கொண்டே வந்தான்.

ஒரு நாள் அவன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுக்கையில் விழுந்தான். பேச்சு வரவில்லை. தான் இறப்பதற்கு முன்பாக அந்தப் தங்க உருண்டையை யாருக்காவது தானமாக கொடுத்துவிட விரும்பினான். தன் விருப்பத்தை அவன் தன் மனைவிக்கு சைகை மூலம் தெரிவித்தான்.

அவன் சொல்வது அவளுக்குப் புரிந்தது. ஆனாலும் அவ்வளவு தங்கத்தையும் தானமாகக் கொடுக்க அவளுக்கு மனமில்லை.

"அப்பா என்ன சொல்கிறார்?" என்று மகன்கள் கேட்க, அவளும் சாமர்த்தியமாக "உங்கள் அப்பாவிற்கு விளாம்பழம் சாப்பிட ஆசையாக இருக்கிறதாம்.." என்று கூறி மழுப்பினாள்.

உடனே மகன்களும் வாங்கி வந்து, அப்பாவுக்கு ஊட்டினார்கள். மனைவியின் பிழையான எண்ணம் அவனுக்குப் புரிந்தது. ஆனாலும், மறுக்காமல் சாப்பிட ஆரம்பித்தான். விளாம்பழம் தொண்டையில் சிக்கியதால் அவன் இறந்தே போனான்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயம்

ஒருவன், காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். பசி எடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மீது ஏறி, கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது, கிளை முறிந்துவிட்டது. சட்டென்று அவன், வேறு ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான்.


குனிந்து பார்த்தால், தரை மிகவும் கீழே இருந்தது. "என்னை யாராவது காப்பாற்றுங்கள்" எனப் பயத்தில் அலறினான்.

அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். அவனைப் பார்த்ததும், சிறிய கல் ஒன்றை எடுத்து மேலே எறிந்தார்.

அவன் பயத்துடன், "பெரியவரே, உதவி கேட்டால், கல்லால் அடிக்கிறீரே?" என்றான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை எடுத்து, அவன் மேல் வீசினார். அவன் கோபமாகி, விடுவிடுவென இறங்கி வந்து அவரைத் திட்டினான்.

பெரியவர் அமைதியாகச் சிரித்துக் கொண்டே, "தம்பி, நான் உன்னைப் பார்த்த போது பயத்தில் இருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும், என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். கீழே இறங்கி வந்து, உன்னைக் காப்பாற்றிக் கொண்டாய்" என்றார் ●







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவனும் கிளியும்

**சிறுவன் -**

பாலைக் கொண்டு தருகின்றேன்,
பழமும் தின்னத் தருகின்றேன்
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்பதேன் கிளியே?

காட்டிலென்றும் இரைதேடிக்
களைத்திடாயோ? உனக்கிந்தக்
கூட்டில் வாழும் வாழ்வினிலே
குறைகளேதும் உண்டோ சொல்?

**கிளி -**

சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகும் படைத்து விடுவானோ?
இறைவன் அறியாப் பாலகனோ?
எண்ணி வினைகள் செய்யானோ?

பாலும் எனக்குத் தேவையில்லை,
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா!

– கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை –








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அது என்ன தெரியுமா?

நெட்டையான காலுடனே
நீளமான கழுத்துடனே
சுட்டுப் பொசுக்கும் மணலில் கூடச்
சுமையைத் தூக்கிச் செல்லும் அது
என்ன தெரியுமா? -
ஒட்டகம்



முறத்தைப் போன்ற காதுடனே
முகத்தில் ஒற்றைக் கையுடனே
உரலைப் போன்ற காலுடனே
ஊர்வலத்தில் வருமே அது
என்ன தெரியுமா? -
யானை



பட்டுப் போன்ற உடலுடனே
பல நிறத்தில் இறகுடனே
கட்டையான குரலுடனே
களித்து நடனம் ஆடும் அது
என்ன தெரியுமா? -
மயில்




வட்டமான முகத்துடனே
வளைந்திருக்கும் மூக்குடனே
முட்டை போன்ற கண்ணுடனே
வேட்டை ஆடும் இரவில் அது
என்ன தெரியுமா? -
ஆந்தை

**- அழ.வள்ளியப்பா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பச்சோந்தியின் வேலை

சந்திரவனக் காட்டுப் பகுதி மழையின்றி வறண்டு போனது. காடு வளம் பெறும் என்று காத்திருந்த முயலுக்கும் பச்சோந்திக்கும் நம்பிக்கை போய்விட்டது.

இரண்டும் உணவின்றித் தவித்தன. இனியும் இங்கே வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்துகொண்டன.

எனவே, வேறு செழிப்பான பகுதிக்குப் போய் வசிக்கலாம் என்று தீர்மானித்து, இரண்டும் புறப்பட்டன. வெகுதூரம் பயணித்த பிறகு வழியில் ஒரு குரங்கைச் சந்தித்தன.

முயலும் பச்சோந்தியும் குரங்கிடம் "அண்ணா! நாங்கள் வசித்த பகுதி வறண்டு போய்விட்டது. செழிப்பான பகுதி ஏதேனும் அருகில் இருக்கிறதா?" என்று கேட்டன.



"சற்றுத் தொலைவில் செழிப்பான காடு இருக்கிறது. நான் அங்கேதான் வசிக்கிறேன். எங்கள் சிங்க ராஜா நன்றாக ஆட்சி நடத்துகிறார். அங்கே போய் நீங்கள் வசிக்கலாம்" என்றது குரங்கு.

முயலும் பச்சோந்தியும் குரங்கு சொன்ன காட்டுக்கு வந்து சேர்ந்தன. காடு செழிப்பாகவே இருந்தது. அப்போது சூரியன் மறைந்து இருட்டிவிட்டதால் அவை இரண்டும் ஒரு மரப்பொந்தில் தங்கின.

"நாம் இன்றிரவு இங்கே தங்கிக்கொள்ளலாம். நாளை முதல் இந்தக் காட்டிலேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நிரந்தரமாக வாழலாம்" என்றது முயல்.



மறுநாள் முயலும் பச்சோந்தியும் ஆளுக்கொரு திசையில் வேலை தேடிச் சென்றன. மாலை இரண்டும் மரப்பொந்துக்கு வந்தன.


"பச்சோந்தி, எனக்கு வேலை கிடைத்துவிட்டது மண்ணைத் தோண்டி கிழங்கு, கடலை எடுக்கும் வேலை" என்றது முயல்.

"அப்படியா! எனக்கு அரசவையில் அதிகாரியாக வேலை கிடைத்திருக்கிறது" என்று பொய் சொன்னது பச்சோந்தி.

மறுநாளிலிருந்து முயல் வேலைக்குச் சென்றுவந்தது. பச்சோந்தி எங்கோ கிளம்பிச் சென்றது. அது எங்கே செல்கிறது என்று யாருக்கும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.

ஒருநாள் கடலைக் காட்டில் முயல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த குரங்கு, "அன்று உன்னுடன் வந்த பச்சோந்தியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்க ராஜா தண்டனை கொடுக்கக் காத்திருக்கிறார்" என்று சொன்னது.

அதைக் கேட்டு முயலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன, கட்டி வைத்திருக்கிறார்களா? அவன் என்ன தவறு செய்தான்?" என்று சொல்லிக்கொண்டே, பச்சோந்தியைக் கட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஓடியது முயல்.




பச்சோந்தி தலை குனிந்தபடி நின்றிருந்தது.

முயல் நேராக சிங்க ராஜாவிடம் போய், "அரசே! இவன் என் நண்பன். இவன் என்ன தவறு செய்தான்?" என்று பணிவாகக் கேட்டது. "ஓ... இவன் உன் நண்பன்தானா? இவன் கடந்த ஒரு மாதமாக நம் காட்டில் பலரும் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கும் உணவு களைத் திருடித் தின்று வந்திருக்கிறான். யாராலும் இவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் இவன் இடத்துக்குத் தகுந்தாற் போல தன் நிறத்தை மாற்றி விடுகிறான். இன்று காய்ந்த இலைச் சருகுகளோடு சருகாக மறைந்து உணவைத் திருடி தின்று கொண்டிருந்தான். ஆனால், திடீரென்று அடித்த காற்றில் சருகுகள் பறந்து போய்விட்டன. இவன் மாட்டிக்கொண்டான். இவனுக்குக் கசையடி கொடுக்கப் போகிறேன்" என்றது சிங்கம்.

முயல் பச்சோந்தியைத் திரும்பிப் பார்த்தது.

"நண்பா, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு மாதமாக வேலைக்குப் போகவில்லை. என் உடலின் நிறத்தை மாற்றும் திறமையை வைத்து நான் உணவைத் திருடித் தின்றேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதது பச்சோந்தி.



பச்சோந்தியின் மீது இரக்கம் கொண்ட முயல் சிங்கத்திடம், "அரசே! இவனை மன்னித்து விடுங்கள். இனி இவன் திருட மாட்டான். ஏதேனும் இவனுக்கு வேலை கொடுங்கள்" என்று கேட்டது.

"நீ இங்கு வந்த ஒரு மாதத்திலேயே நல்ல உழைப்பாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரிந்துகொண்டேன். உனக்காகப் பச்சோந்தியை மன்னிக்கிறேன். இவன் நம் உளவுத்துறையில் பணி புரியட்டும். எதிரிகளின் கண்ணில் படாமல் மறைந்திருந்து உளவு பார்த்து வரட்டும். ஒருவன் தனக்கு இருக்கும் திறமையை நல்வழியில் பயன்படுத்தினால் எப்போதும் பேரும் புகழும் கிடைக்கும். தீய வழியில் பயன்படுத்தினால் தீமைதான் நடக்கும்" என்றது சிங்கம்.

பச்சோந்தியும் திருடுவதை விட்டுவிட்டு, உழைத்து வாழ ஆரம்பித்தது ●

# தாய்மை

பழங்காலத்தில் ஜப்பான் நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் நடைமுறையில் இருந்தது. பெற்றோர்கள் வயதாகி முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து, மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் உயரமான மலைகளின் மேல் வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ள அம்முதியோர்கள் பசி, தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி இறந்து போவார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயைச் சுமந்து கொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தான்.



தாய், மகன் இருவருமே எதுவும் பேசவில்லை. ஆனால், சிறிது நேரத்தில் தன் தோளில் இருந்த தாயார், ஏதோ ஒருவித மணம் கொண்ட மரங்களின் சின்னசின்ன கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருவதை மகன் அறிந்தான்.

அவன் நடந்து கொண்டே, "அம்மா ஏதோ மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருகிறீர்களே ஏன்?" என்று கேட்டான்.

அதற்குத் தாயார், "மகனே, நீ என்னை மலை மீது விட்டுவிட்டு வீடு திரும்பும் போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா? இங்கே போடப்பட்டுள்ள கிளைகளின் வாசனையைக் கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய்ச் சேரலாம். அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன்" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறர் நிலையை உணர வேண்டும்

பகல் வேளையில் ஒரு மைனா பழங்களை வயிராற சாப்பிட்டு, மகிழ்ச்சியுடன் பாடித் திரிந்தது. ஒவ்வொரு மரக் கிளைகளிலும் தாவித்தாவிப் பாடிக் கொண்டிருந்தது.

அப்போழுது ஒருமரப் பொந்தில் ஆந்தை தூங்கிக் கொண்டு இருந்தது. ஆந்தை எப்பொழுதும் இரவில் விழித்து பறந்து திரியும். பகலில் அது படுத்து உறங்கிவிடும்.

அப்படிப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த ஆந்தைக்கு, மைனாவின் பாட்டுச் சத்தம் தூக்கத்தைக் கெடுத்து, எரிச்சலைக் கிளப்பி விட்டது.

இதனால் பாதித் தூக்கத்தில் விழித்துக் கொண்ட ஆந்தை, மரப் பொந்தை விட்டு வெளியே வந்தது. அங்கு பாடி மகிழ்ந்து கொண்டு இருந்த மைனாவைப் பார்த்தது.

“ஏன் இப்படி என்னைத் தூங்கவிடாமல் சத்தம் போடுகிறாய்” எனக் கேட்டது.

“ஆந்தையே, உனக்குப் பகலில் கண்கள் தெரியாது என்ற காரணத்தால், மரப்பொந்தில் அடைந்து தூங்குகிறாய், நான் எவ்வளவு அழகாகப் பாடுகிறேன்” உனக்கு அதனை இரசிக்கும் திறன் இல்லை என நினைக்கிறேன்” என்றபடி மைனா சத்தமிட்டு பாடிப் பறந்தது.

இப்படிச் சொன்னால் மைனா கேட்காது. இதற்கு ஓர் உபாயம் செய்வோம் என்ற முடிவுக்கு வந்தது ஆந்தை.

“ஓ மைனா, நீ பாட்டுப் பாடுகிறாயா”

“ஆமாம், பாட்டுத்தான் பாடுகிறேன்”

“சும்மா பொழுது போகாமல் கத்திக் கொண்டிருக்கிறாய் என்றல்லவா நினைத்தேன்”

“இல்லை, இல்லை நான் பாட்டுத்தான் பாடுகிறேன்”

“உன் குரலில் இனிமை இல்லையே” என விமர்சனம் செய்தது ஆந்தை.

“குரலினிமைக்கு நான் என்ன செய்வது?” ஆசையுடன் கேட்டது மைனா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஒரு மருந்து வைத்துள்ளேன். சாப்பிட்டால் குரல்வளம் கிடைக்கும்" என ஆந்தை கூறியதும், அதை நம்பி மைனா அதன் அருகில் சென்றது.

உடனே ஆந்தை மைனாவைப் பிடித்துக் கொண்டது. "என்ன உனக்கு மருந்தா வேண்டும்?. உன்னைக் கொல்லப் போகிறேன் பார்" எனப் பயமுறுத்தியது ஆந்தை.

மைனா தன்னை விட்டு விடுமாறு கெஞ்சியது.


"நான் சொல்வதைக் கேட்டிருந்தால் உனக்கு இந்தக் நிலைமை வந்திருக்காது இல்லையா" என்றது ஆந்தை.

"இனிமேல் உன் பேச்சுப்படியே நடக்கிறேன். என்னைத் தயவு செய்து விட்டு விடு" என கண்ணீர் விட்டு அழுது கெஞ்சியது மைனா.

"உன் மகிழ்ச்சி மட்டும் பெரிது என்று எண்ணாதே மற்றவரின் சூழ்நிலையையும் பார்த்து நடந்து கொள். நான் சொல்வது உனக்குப் புரிந்ததா?" என ஆந்தை அதட்டியது.


"அப்படியே நடக்கிறேன். இம்முறை என்னை மன்னித்து விட்டு விடு" என்றது மைனா.

"சரி பிழைத்து போ" என மைனாவை விடுவித்தது ஆந்தை ●




**தலைக்குப் பொருந்தும் காலை கண்டுபிடியுங்கள்.**

**இதிலுள்ள படங்களின் பெயர்களை பட்டியலிடுங்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுக்கிளி




ஆப்பிரிக்கக் கிளி ஒன்றை கூண்டினுள் வைத்து ஒருவர் வளர்த்து வந்தார். ஒருமுறை அவர் ஆப்பிரிக்கா செல்லும் போது கிளி சொல்லிற்றாம், 'என் ஜோடிக் கிளி அங்கிருக்கும் அதனிடம் நான் இங்கு கூண்டில் இருப்பதாகச் சொல்லுங்கள்" என்று.

அவரும் தன் வேலை முடிந்த பின் சிரமப்பட்டு காட்டில் தனியாக இருந்த அந்தக் கிளியைக் கண்டு விபரம் சொல்ல, அது உடனே கண்ணீர் உகுத்துக் கீழே சுருண்டு விழுந்து விட்டது. அடடா, இந்தக் கிளி இறந்ததற்கு நாம் காரணமாகி விட்டோமே என்று வருத்தப்பட்டு ஊருக்கு வந்து கூண்டுக் கிளியிடம் விபரம் சொல்ல, அக்கிளியும் கண்ணீர் உகுத்து கூண்டினுள்ளேயே விழுந்து விட்டது.

நம்மால் இந்தக் கிளியும் அநியாயமாய் இறந்து விட்டதே என்ற வருத்தத்துடன் கூண்டைத் திறந்தார் அவர். உடனே அந்தக் கிளி பறந்து போய் பக்கத்திலிருந்த மரக்கிளையில் அமர்ந்தது. உடனே அவர், 'உன் ஜோடிக் கிளி இறந்தது தெரிந்தும் நீ என்னிடம் நடித்துத் தப்பி விட்டாயே" என்றார்.

அதற்கு அக்கிளியும், 'என் ஜோடிக் கிளி இறக்கவில்லை. கூண்டில் அடைபட்ட நான் தப்பிக்கும் வழியை உங்களிடமே அது சொல்லி அனுப்பியிருக்கிறது" என்றது. கூறி விட்டு அது தன் ஜோடிக் கிளியைத் தேடிப் பறந்து விட்டது. பறவைகளை கூண்டுக்குள் அடைக்காதீர்கள். சுதந்திரம் நமக்குமட்டுமல்ல அவைகளுக்கும்தான்...!

**இவ்விரு படங்களிலும் 10 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பானைகள்

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன.

கேலியைப் பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்"

அதற்கு விவசாயி, "பானையே நீ ஒன்றைக் கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்" என்றான்



இதைக் கேட்ட பானை தன்னைப் பற்றி கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது.

அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுத்தெரு என்றொரு கிராமத்தில் கந்தன் என்ற ஆடு மேய்ப்பவன் இருந்தான். வழக்கமாக ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துக் கொண்டிருந்தன. கந்தனுக்கு புல்லாங்குழல் வாசிப்பது என்றால் மிகுந்த விருப்பம். ஆடுகளை மேய்த்தவாறு மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்தான்.

அந்தப் புல்வெளியைச் சுற்றி முள்வேலி போடப்பட்டிருந்தது. வேலியின் அருகே ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலியின் மறுபுறம் ஓநாய் ஒன்று வேட்டைக்காக காத்திருந்தது. ஓநாய் ஆட்டுக்குட்டியை பார்த்ததும், எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி, சற்று ஆச்சரியமாக பார்த்தது. ஓநாயை முதல் முறையாக பார்த்ததினால் அதன் நோக்கம் ஆட்டுக்குட்டிக்கு தெரியாமல் இருந்தது.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று பாசமாக கேட்டது ஆட்டுக்குட்டி. ஓநாயோ "நண்பா, நண்பா... நீ பார்க்க மிக அழகாக இருக்கிறாய், இங்கே இளம் புல் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டது. "இளம்புல் என்றால் எனக்கு விருப்பம். அதைத் தின்று, தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்கவில்லை....." என்றது ஓநாய்.

"ஓ...! அப்படியா! நீ புல் சாப்பிடுவாயா? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"இல்லை அதெல்லாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய். "ஓ அப்படியா சரி அங்கேயே இருங்கள். நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய் அதைச் சாப்பிட்டுவிட்டு, நண்பர்களாக சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

ஓநாயின் திட்டம் தெரியாமல், ஆடு நட்புடன் சென்றது, ஓநாயின் பக்கம் சென்றதும் அது திடீரென ஆட்டுக்குட்டியின் காலைப் பிடித்துக் கொண்டது. ஆடு சத்தமாக கத்தத் தொடங்கியது, கந்தன் சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓடினான். தாய் ஆடும் ஓடியது.

ஓநாய் ஆட்டுக்குட்டியின் கழுத்தைப் பிடிக்கும் நேரத்தில் கந்தன் ஓநாயை அடித்து விரட்டி விட்டான்.

அந்த ஆட்டுக் குட்டி அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், இந்தப் போன்று ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். தன் உயிரைக் காப்பாற்றிய கந்தனுக்கும், பெற்றோர்க்கும் நன்றியோடு நடந்து கொண்டது அந்த ஆட்டுக்குட்டி



# ஓநாயும் ஆட்டுக் குட்டியும்

**முன் அட்டையின் உள் பக்க புதிருக்கான விடைகள்:**

1. மொத்தம் 5 பறவைகள் (மரத்தில் 3, நிலத்தில் 2)
2. மூன்றாவது முட்டை கீழே உள்ள பூவில் உள்ளது.
3. கழுகு அமர்ந்துள்ள மலைப் பாறையில் இரண்டு பாம்புகள் உள்ளன.
4. வாத்து.
5. நிலத்தில் உள்ள எழுத்துக் களில் இருக்கும் "SNAKE"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்


























**தொடர்புகளுக்கு**
இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
தொலைபேசி : 021 221 7092, தொலைநகல்: 021 221 7092
மின்னஞ்சல் : aaruthaltrinco@gmail.com இணையதளம் : www.aaruthal.lk

noolaham.org | aavanaham.org